INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

JDS
Journalists for Democracy in Sri Lanka

# கூட்டு ஊடக அறிக்கை: இலங்கை – கடும் நடவடிக்கைகள் ஆரம்பம்

***13 ஜனவரி 2020***

**ஜொகானஸ்பேர்க்:** ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச தலைமையிலான இலங்கையின் புதிய அரசாங்கமானது விமர்சகர்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாவலர்களை இலக்கு வைத்து ஒரு அச்சமூட்டும் அடக்குமுறை நடவடிக்கையை கட்டவிழ்த்துவிட்டு இலங்கையை இராணுவமயமாக்கும் மற்றும் பலப்படுத்தும் அதனுடைய மூலோபாயத்தை ஆரம்பித்துள்ளது என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம் - இலங்கை (ITJP) மற்றும் இலங்கையில் ஜனநாயகத்திற்கான பத்திரிகையாளர்கள் (JDS) என்ற இரண்டு மனித உரிமைகள் அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

தமது சொந்தப் பாதுகாப்பிற்காக பெயர் வெளியிடப்படமுடியாத இலங்கையிலுள்ள செயற்பாட்டாளர்களின் உதவியுடன் இந்த இரண்டு அமைப்புக்களும் ஊடகவியலாளர்கள், மனித உரிமைகள் பாதுகாவலர்கள், வழக்கறிஞர்கள், வழக்குத்தொடுநர்கள் , கல்விமான்கள், மற்றும் எதிர்ப்பாளர்களை இலக்குவைத்து தேர்தலுக்கு முன்பும் பின்பும் இடம்பெற்ற மிரட்டல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் பற்றிய 69 சம்பவங்களை ஆவணப்படுத்தியுள்ளன. சில சம்பவங்களில் அச்சுறுத்தல்கள் மிகவும் மோசமாக இருந்துள்ளதுடன் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

“பொறுப்புக்கூறலை மேற்கொள்வதற்வதற்கான எந்த முயற்சிகள் இல்லாது ஒழிக்கப்படுவதுடன் மேலும் நவீனமயப்படுத்தப்பட்ட மற்றும் இறுக்கமான கண்காணிப்புகளுடன் கூட இலங்கையில் ஜனநாயக நடவடிக்கைகள் பாரிய அளவில் குறைவடைந்து வருவதையுமே நாங்கள் பார்க்கின்றோம்” என ITJP இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்தார். “உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களின் பின்னர் சர்வதேச சமூகமானது இலங்கை அரசிற்கு வழங்கும் அதிகரித்த பாதுகாப்பு உதவியானது மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது இப்போது கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு தவறான விதத்தில் பயன்படுத்தப்படாமலிருப்பதை உறுதிசெய்ய வேண்டியுள்ளது”.

கோத்தபாய ராஜபக்ச தனது முன்னாள் படையணியின் பல உறுப்பினர்களை அதிகாரம்வாய்ந்த பதவிகளுக்கு நியமிப்பதன் மூலம் எவ்வாறு தனது விழுதுகளை அரசாங்கம் முழுவதும் பரப்பினார் என்பதையும் அவர் எவ்வாறு காவல்துறை மற்றும் புலனாய்வு நடவடிக்கைகளை மேலும் இராணுவமயப்படுத்தியுள்ளார் என்பதையும் இந்த அறிக்கை காட்டுகின்றது. மோசடி உட்பட கடந்த காலத்தில் இடம்பெற்ற குற்றங்களை விசாரணை செய்வதில் தொடர்பட்டவர்கள் தமது பதவிகளில் இருந்து நீக்கப்பட்டார்கள்.

“முன்னர் மோசடி அல்லது போர்க்குற்றங்களில் சம்பந்தப்பட்டிருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்ட தனிநபர்கள் தற்போது மீண்டும் பதவிக்கு வந்துள்ளார்கள் - அதிகாரம் வாய்ந்த பதவிகளை ஆக்கிரமித்துள்ள இந்த அரசானது அம்பலத்திற்கு வந்துள்ளது” என JDS இனைச் சேர்ந்த பாசனா அபயவர்த்தனா தெரிவித்தார் , முன்னர் பகிரங்கமாக கருத்துவெளியிட்ட ஊடகவியலாளர்கள், வர்த்தக சங்க செயற்பாட்டாளர்கள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களையும் அமைதியடையச் செய்யும் அசௌகரியமான சூழ்நிலையை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

முற்றும்

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT